**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 16.09.2025

**அசல் வழக்கு எண்.138/2021**

**வா.சா.1 – லட்சுமி, க/பெ.ஆறுமுகம்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களுக்கு ஐந்து வயது இருக்கும் பொழுது உங்கள் தகப்பனார் காலமாகிவிட்டார் என்றால் சரியில்லை. 10 வயது இருக்கும் போது இறந்துவிட்டார். அதன் பிறகு நீங்கள் உங்கள் சகோதரர் பராமரிப்பில் இருந்து வந்தீர்கள் என்றால் சரியில்லை. அம்மாவுடைய பராமரிப்பில் தான் இருந்து வந்தேன். உங்கள் தாயார் சென்னையில் ஒரு ஹாஸ்டலில் சமையல்காரராக இருந்தார் என்றால் சரிதான்.நீங்களும் உங்கள் சகோதரரும் தான் வழக்கு சொத்து அமைந்துள்ள கிராமத்தில் இருந்து வந்தீர்கள் என்றால் சரிதான். நீங்களும் உங்கள் சகோதரர் மட்டுமே தனியாக வசித்து வந்தீர்கள் என்றால் சரிதான். அப்பொழுது வழக்கு சொத்தில் குடிசை வீடு தான் இருந்தது என்றால் சரிதான். உங்களுக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் கடந்த 1994 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. உங்களை சைதாப்பேட்டையில் திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். உங்கள் சகோதரர் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் என் அம்மா தான் திருமணம் செய்து வைத்தார். உங்கள் தாயார் திருமணம் செய்து வைத்ததாக நீங்கள் கூறுவது பொய் என்று சொன்னால் சரியில்லை. அதன் பிறகு கடந்த 1997 ஆம் ஆண்டு உங்களுடைய சகோதரர் அந்த தாவா இடத்தில் மெத்தை வீடு கட்ட முயற்சி செய்தார் என்றால் சரிதான். நீங்கள் உங்களுக்கு திருமணம் நடைபெற்ற பிறகு உங்கள் கணவர் வீட்டில் தான் வசித்து வந்தீர்கள் என்றால் திருமணம் ஆன கொஞ்ச நாளில் என் அம்மா என்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்து பத்திரமாக வைத்துக் கொண்டார்கள். உங்கள் தாயார் எத்தனை ஆண்டுகள் சென்னையில் வேலை செய்தார்கள் என்றால் 8 ஆண்டுகள் வேலை செய்தார்கள் திருமணம் ஆனதற்கு பிறகு 8 ஆண்டுகள் வேலை செய்தார்கள். 8 ஆண்டுகளாக உங்கள் அம்மாவுடன் தான் வசித்து வந்தீர்களா என்றால் சரிதான். கடந்த 1997 ஆம் ஆண்டு லோன் போட்டு கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டினார் என்றால் சரிதான். பிரதிவாதி வீடு

கட்டினார் என்றால் சரிதான். ரெண்டு பேரும் சேர்ந்து தான் கையொப்பம் போட்டோம். வழக்கு சொத்து உங்கள் அப்பாவுடைய சொத்து என்று சொன்னால் சரிதான். ஆகவே உங்களிடமும் வாரிசுதாரர்கள் என்கிற முறையில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதேபோல் உங்கள் தாயாரிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த கடன் தொகையை வைத்து தான் வீடு கட்டினார் என்றால் சரிதான். எத்தனை சதுர அடி வீடு கட்டினார் என்றால் 900 சதுரஅடி வீடு கட்டினார். முன் பகுதியில் தான் வீடு கட்டினார். வறுமையின் காரணமாக 2001 ம் ஆண்டு உங்களையும் உங்கள் கணவரையும் பிரதிவாதி தாவா கிராமத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியில்லை. நீங்களும் உங்கள் கணவரும் வந்த பிறகு தாவா சொத்தில் ஒரு குடிசை வீடு கட்டி பின்புறத்தில் வசித்து வந்தீர்கள் என்றால் சரியில்லை. ஒன்றாக தான் இருந்தோம். பிரமாண வாக்குமூலம் படித்து பார்த்து கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். அதில் நீங்களும் உங்கள் கணவரும் குடிசை வீடு கட்டி பின்புறம் வசித்து வந்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். ஒரு உணவகம் நடத்த வேண்டும் என்கிற எண்ணத்தில் அந்த குடிசை வீடு கட்டப்பட்டது என்றால் சரி இல்லை. குடிசை வீட்டில் இட்லி கடை நடத்தி தான் வந்தேன் ஆனால் ஒன்றாக தான் இருந்தோம். எவ்வளவு நாளாக அங்கு வசித்து இட்லி கடை நடத்தி வருகிறீர்கள் என்றால் இதுநாள் வரை நடத்திக் கொண்டுதான் வந்தேன் குடிசையை கிழித்து வெளியே விரட்டி விட்டதால் இன்று நாங்கள் ரோட்டில் தான் இருக்கிறோம். 10 ஆண்டுகளுக்கு முன்பாக இட்லி கடை நடத்தி வந்தேன். தற்போது தாம்பரம் மெயின் ரோட்டில் தள்ளுவண்டி கடையில் இட்லி கடை நடத்தி வருகிறீர்கள் என்றால் தாம்பரம் டூ வாலாஜாபாத் மெயின் ரோட்டில் இட்லி கடை நடத்தி வருகிறேன். கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியதை பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சேர்ந்து தான் அடைத்தோம். நீங்கள் சேர்ந்து அடைத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்து கொண்டீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி தாவா சொத்தின் முன் பகுதியில் மெந்தை வீட்டில் வசித்து வருவதாக நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். மீதம் உள்ள பின்பகுதியில் ஆயிரம் சதுர அடி உள்ளது என்பது உங்கள் வாதம் என்றால் சரிதான். நீங்கள் குடிசை வீடு கட்டி இருந்ததாக சொல்லும் வீட்டின் அதனுடைய அளவு தெரியுமா என்றால் 25 அடிக்கு 14 அடி ஆகும். உங்கள் தெருவில் அனைத்து வீடுகளிலும் 10 அடி ரோடுக்காக பஞ்சாயத்து சார்பில் எடுக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் அந்த அளவுகளை கழித்து தாவா தாக்கல் செய்தீர்களா அல்லது சேர்த்து தாவா தாக்கல்

செய்தீர்களா என்றால் ஞாபகம் இல்லை. ரோடுக்கு 10 அடி எடுத்த விவரம் வழக்கில் சொன்னீர்களா என்றால் சொல்லி உள்ளேன். அவ்வாறு நீங்கள் எந்த விவரமும் வழக்கில் சொல்லவில்லை அதை கழித்தும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி இல்லை. மீதம் இருந்து பகுதியில் பிரதிவாதி ஷெட் போட்டு அனுபவித்து வந்தார் என்றால் சரியில்லை. பிரதிவாதியின் மகன் வாட்டர் கேன் பிசினஸ் செய்கிறார் என்றால் சரிதான். அந்த இடத்தில் வண்டி விடுவது வாட்டர் கேன் பிசினஸ் என்றால் சரியில்லை. வண்டி மட்டும் விடுகிறார்கள். காலிகேன் எங்கு வைத்துள்ளார்கள் என்றால் வீட்டிற்குள்ளேயே வைத்துக் கொள்கிறார்கள். வழக்கு சொத்து முழுவதும் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியில்லை. பிரச்சனை வருவதற்கு முன்பு முழுவதுமாக அனுபவித்து வந்தோம் தற்பொழுது பிரதிவாதி அனுபவித்து வருகிறார். உங்களுக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 12 ஆண்டுகளாக சொத்து பிரச்சனையால் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி 12 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியில்லை. நீங்கள் பிரதிவாதி மீது 2015 ஆம் ஆண்டு ஒரு வழக்கு தாக்கல் செய்தீர்கள் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு பற்றி இந்த தாவாவில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. நீங்களும் பிரதிவாதியும் கூட்டாக அனுபவிப்பதாக வழக்கில் பொய் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரியில்லை. ஏற்கனவே ஊரில் பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரியில்லை. சோமசுந்தரம், ஆறுமுகம், பாலகிருஷ்ணன், தேவராஜ், ராமசாமி, குருபாகம் ஆகியோர்கள் உங்கள் ஊரில் பஞ்சாயத்தார்களாக இருந்தார்களா என்றால் ஊர் பெரியவர்கள் ஆவர். பஞ்சாயத்து நடைபெற்றதா என்றால் சொத்துக்காக பஞ்சாயத்து நடைபெறவில்லை. அந்தப் பஞ்சாயத்து நடைமுறையில் உங்களுக்கு பாக சொத்துக்கு ஈடாக 30 சவரன் நகை கொடுக்கப்பட்டது என்றால் சரியில்லை. அது போல் கலவை கிராமத்தில் உங்களுக்கு ஒரு மனை உண்டு என்று சொன்னால் சரிதான். அந்த மனையை பிரதிவாதி உங்கள் பெயரில் வாங்கி வைத்தார் என்றால் சேர்ந்து தான் இரண்டு மனை வாங்கி ஆளுக்கு ஒரு மனை இருக்கிறது. 30 பவுன் நகை பஞ்சாயத்தார் முன்னிலையில் ரசீது எழுதி கொடுத்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் பாகம் கேட்கக் கூடாது என்று பஞ்சாயத்து செய்யப்பட்டது என்றால் சரியில்லை. மின் இணைப்பு குடிசைக்கு பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். சகோதரி என்பதால் முதலீடு செய்து வளர்த்து விட்டார் என்றால் சரியில்லை. அதற்கு

ஈடாக தான் 30 சவரன் வாங்கிக்கொண்டு சொத்தை விட்டுகொடுத்து விட்டீர்கள் என்றால் சரியில்லை. பட்டா எண் யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. தகப்பனார் இறந்த பிறகு பட்டா மாற்றிக் கொண்டார் என்றால் சரியில்லை. கல்யாணம் ஆன பிறகு மாற்றிக் கொண்டார். உங்களுடைய ஒப்புதலின் பெயரில் நீங்கள் விட்டுக் கொடுத்ததின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரி இல்லை. அது முதல் தாவா சொத்தில் அவர் தனி உரிமையாளர் என்கிற அடிப்படையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரியில்லை. முதல் மாடிக்கட்ட நகை கொடுத்தேன் என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியில்லை. பிரதிவாதி ரியல் எஸ்டேட் புரோகிராக இருந்தார் என்றால் தெரியாது. உங்களுக்கு நன்கு தெரியும் அந்த வருமானத்தைக் கொண்டுதான் முதல் மாடி கட்டினார் என்றால் சரியில்லை. உணவகத்தில் உங்களுக்கு போதிய வருமானம் இல்லை என்று சொன்னால் சரியில்லை. பிரதிவாதிக்கு பண உதவி செய்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் 2015 ஆம் ஆண்டு குப்பன் என்பவரிடமிருந்து ஒரு மனையை கிரயம் வாங்கினீர்கள் என்றால் சரிதான். அந்த வீட்டு மனை உங்கள் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். நகையை வைத்து தான் மனை வாங்கினீர்கள் என்றால் சரியில்லை. குடிசை பிரிந்த பிறகு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பாக நான்கு வீடு தள்ளி வாடகைக்கு சென்றுவிட்டீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய பாகத்தை ஏற்கனவே விட்டுக் கொடுத்துவிட்டதால் உங்களுக்கு பாகம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.